எல்ஆர்ஜி கல்லூரியில் பிரிவு உபசார விழா

▶ திருப்பூர் எல்ஆர்ஜி அரசு மகளிர் கலை கல்லூரியில் நேற்று பிரிவு உபச்சார விழா நடைபெற்றது.

திருப்பூர், மார்ச் 27: திருப்பூர் பல்லடம் சாலையில் உள்ள எல்ஆர்ஜி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் இளங்கலை மற்றும் முதுகலை படிப்புகள் பல்வேறு நிலைகளில் இளங்கலை, வணிகவியல் இளங்கலை, அறிவியல் இளங்கலை, வணிகவியல் முதுகலை, அறிவியல் முதுகலை, கலை முதுகலை உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் 3 ஆயிரத்திற்கும் அதிகமான மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். கல்லூரியில் மூன்றாமாண்டு பயிலும் மாணவிகளுக்கான பிரிவு உபசார விழா நேற்று நடந்தது. அப்போது தங்களுடன் பயின்ற தோழிகளுடன் செல்பி மற்றும் குழு படம் எடுத்து மகிழ்ந்தனர். பிரிவு உபசார விழாவையொட்டி காலை முதல் மகிழ்ச்சியுடன் ஆடல் பாடல் நடனம் என உற்சாகத்தில் திளைத்த மாணவிகள் விழாவின் இறுதியில் தோழிகள் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவி அழுது தங்களது பிரிவை எண்ணி வருத்தம் அடைந்தனர்.

தொடர்ந்து கல்லூரி ஆசிரியர்களிடம் வாழ்த்து பெற்றுக் கொண்டனர். மாணவிகளுக்கு வாழ்த்து தெரிவித்த ஆசிரியர்கள் தொடர்ந்து ஒற்றுமையோடு இருப்பது மட்டுமல்லாது முன்னாள் மாணவிகளாக கல்லூரியுடன் எப்போதும் தொடர்பில் இருக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர்.

சேவூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில்

தலைமை ஆசிரியர் இல்லாததால் மாணவர் சேர்க்கை சுணக்கம்

நூற்றாண்டு விழா காணும் பள்ளிக்கு வந்த சோதனை

அவிநாசி, மார்ச் 27: அவிநாசி ஒன்றியத்திற்குட்பட்ட சேவூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் 425 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றனர். 1 முதல் 5ம் வகுப்பு வரை தமிழ் மற்றும் ஆங்கில வழிகளில் கல்வி முறையில் நடைபெற்று வருகிறது. இப்பள்ளியில் தமிழ் மற்றும் ஆங்கில வழிக்கல்வி, கணிப்பொறிக்கல்வி, உடற்பயிற்சி, கராத்தே, யோகா, மற்றும் உருது பாடம், மற்றும் மாணவர்களுக்கு அறிவு திறன் வளர்க்க தனி நூலக வசதி, போன்ற கூடுதலான செயல்பாடுகளுடன் இப்பள்ளி திகழ்ந்து வருகிறது.

இது குறித்து சமூக ஆர்வலர்கள் கூறுகையில், "சேவூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் போதுமான கட்டிட வசதி, இடவசதி குறைவாக உள்ளது. விளையாட்டு மைதானம் இல்லை. காலை உணவு திட்டம் செயல்படுத்த இட வசதி இல்லாததால் மாணவர்கள் பயிலும் ஒரு வகுப்பறையை கொடுத்துள்ளனர். இங்கு கட்டிட வசதி, இட வசதியை மேம்படுத்தியும், விளையாட்டு மைதானம் அமைத்து கொடுத்து, கூடுதலாக ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டால் இன்னும் மாணவர் சேர்க்கை எண்ணிக்கை கூடுதலாக இருக்கும்" என்றனர்.

இந்நிலையில் தற்போது இப்பள்ளியில் ஒரு வருட காலமாக தலைமை ஆசிரியர் இல்லை. மேலும் இடைநிலை ஆசிரியர்கள் 4 பேர் பணியிட மாறுதலில் சென்றதால் 4 தற்காலிக ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பள்ளியில் ஒரே ஒரு ஆசிரியர், மற்ற அனைவரும் ஆசிரியைகள் உள்ளனர். சேவூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியானது 1919ம் ஆண்டு ஜூன் மாதம் 19ம் தேதி துவக்கப்பட்டு தற்போது 106 வருடங்கள் ஆகிறது.

இந்நிலையில் பள்ளியின் நூற்றாண்டு விழா வருகிற 28, 29, 30, தேதிகளில் (வெள்ளி, சனி, ஞாயிறு) நடைபெற உள்ளது.

பள்ளியின் அருகில் வாரச்சந்தை செயல்படுகிறது. இந்த வார சந்தையில் பள்ளியின் (வடபுறம்) அருகே உள்ள இடம் காலியாக தான் இருக்கிறது. பள்ளியின் மேற்கே மைதானம் உள்ளது. இந்த இரு இடங்களில் ஏதாவது ஒரு இடத்தை பள்ளியின் நூற்றாண்டு விழாவிற்கு வரும் அமைச்சர்கள், அதிகாரிகள் தேர்வு செய்து கூடுதல் வகுப்பறைகள், விளையாட்டு மைதானம் அமைத்து மாணவ, மாணவிகளின் கனவை நிறைவேற்ற வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சாலையை சீரமைக்கக் கோரி

எருமை மாட்டுடன் போராட்டம் நடத்த முயன்றதால் பரபரப்பு

திருப்பூர், மார்ச் 27: திருப்பூர் மாநகராட்சி வீரபாண்டி முதல் கோவில் வரை உள்ள சுமார் 5 கிலோ மீட்டருக்கு கடந்த சில மாதங்களுக்கு முன்பு தார் சாலை அமைக்கப்பட்டது. சாலையின் ஒரு பகுதியில் மாநகராட்சி சார்பில் குடிநீர் குழாய் பதிக்கும் பணிக்காக கடந்த 3 மாதத்திற்கு முன்னர் குழி தோண்டப்பட்டது. ஆனால் அந்த குழிகள் சரிவர மூடப்படாதால் ஏராளமான விபத்துக்கள் ஏற்பட்டுள்ளது. இந்த சாலையில் இதுவரை சுமார் 70 விபத்து வழக்குகள் பதிவு செய்யப்பட்டதாக போலீசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

▶ திருப்பூர் வீரபாண்டி முதல் கோவில் வழி வரை உள்ள சாலையை சீரமைக்கக்கோரி பூங்கா நகரில் விவசாயிகள் சங்கத்தினர் நேற்று போராட்டத்தில் ஈடுபட முயன்றனர். அவர்களிடம் போலீசார் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதனிடையே இந்த சாலையை சரி செய்ய வலியுறுத்தி இந்த பகுதி பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் சார்பில் ஏராளமான கோரிக்கைகள் விடுத்து வந்தனர். இது குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்காத நிலையில் நேற்று தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் சார்பில் சாலையை சீரமைக்க கோரி எமன் எருமை மீது வலம் வந்து பாசக்கயிறால் பாடை கட்டும் போராட்டத்தை அறிவித்தனர்.

அதன்படி போராட்டம் நடத்துவதற்காக பூங்கா நகர் பகுதியில் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் நேற்று கூடினர். எருமை மாட்டுடன் போராட்டம் நடத்துவதற்கு போலீசார் அனுமதி மறுத்த நிலையில் எருமை மாட்டை போராட்டம் நடத்தும் இடத்திற்கு கொண்டு வருவதற்கு முன்பே போலீசார் அதனை வேறு இடத்திற்கு அப்புறப்படுத்தினர்.

தொடர்ந்து விவசாயிகள் மற்றும் பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். மாநகராட்சி அதிகாரிகளும் பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் 10 நாட்களுக்குள் சாலைகள் சீரமைத்து தரப்படும் என்ற உறுதி அளித்ததின் அடிப்படையில் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர். இந்த போராட்டத்தால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பெருமாநல்லூரில் வணிகர் சங்க பேரவை ஆலோசனை கூட்டம்

அவிநாசி, மார்ச் 27: தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை 42வது மாநில மாநாட்டுக்கு செல்வது குறித்து ஆலோசனைக் கூட்டம் நேற்று பெருமாநல்லூரில் நடந்தது. பெருமாநல்லூர் தலைவர் பழக்கடை குமார் தலைமை தாங்கினார். கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக திருப்பூர் வடக்கு மாவட்ட தலைவர் கண்ணப்பன் பேசினார். கூட்டத்தில், வடக்கு மாவட்டம் சார்பில் சென்னையில் நடைபெறும் 42வது மாநில மாநாட்டுக்கு சுமார் 500 பேர் செல்வதாவும் 10 மினி பஸ் மற்றும் கார், வேன் என மாநாட்டுக்கு விளம்பர பலகைகள் வால் போஸ்டர்கள் துண்டு பிரசுரங்களை மக்களிடம் வழங்குவது குறித்தும் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் வடக்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆடல்அரசு, மாவட்ட செயலாளர் பாஸ்கர், இளைஞர் அணி தலைவர் ரமேஷ், மாவட்ட துணை தலைவர் ஜோதீஸ்வரன், மகளிரணி பத்மாவதி உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

திருப்பூர் மல்லிகை நகரில்

பனியன் நிறுவனத்தில் பயங்கர தீ விபத்து

▶ திருப்பூர் காலேஜ் ரோடு மல்லிகை நகரில் உள்ள பனியன் நிறுவனத்தில் நேற்று தீ விபத்து ஏற்பட்டது.

திருப்பூர், மார்ச் 27: திருப்பூர் மல்லிகை நகரில் பனியன் நிறுவனத்தில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

திருப்பூர், காலேஜ் ரோடு, மல்லிகை நகரில் கர்நாடகா மாநிலத்தை சேர்ந்த உதயச்சந்திரா என்பவர் பனியன் நிறுவனம் நடத்தி வருகிறார். இதில் 10க்கும் மேற்பட்டோர் பணியாற்றி வருகின்றனர். இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு வழக்கம் போல் பணிகள் முடித்து நிறுவனம் பூட்டப்பட்டது. தொடர்ந்து நள்ளிரவில் திடீரென தீ பிடித்து கொளுந்துவிட்டு எரிந்தது. இதனை பார்த்த அப்பகுதி பொதுமக்கள் வடக்கு தீயணைப்பு துறையினருக்கு தகவல் கொடுத்தனர். தீயணைப்பு நிலைய அலுவலர் வீரராஜ் தலைமையிலான குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து 2 மணி நேரம் போராடி தண்ணீரை பீய்ச்சியடித்து தீயை அணைத்தனர். தீ விபத்தில் ஏராளமான பனியன் ரோல்கள் கருகி சேதமானது. விசாரணையில் மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டது தெரியவந்தது. தொடர்ந்து வடக்கு போலீசார் விசாரித்து வருகின்றனர்.

முதல்வர் காப்பீடு திட்டத்தில்

5.62 லட்சம் பேருக்கு அடையாள அட்டை

கலெக்டர் தகவல்

திருப்பூர், மார்ச் 27: திருப்பூர் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, மாவட்ட தலைமை மருத்துவமனை, காங்கயம் மற்றும் அவிநாசி, ஜல்லிபட்டி, கரடிவாவி, மடத்துக்குளம், பல்லடம், ஊத்துக்குளி, தாராபுரம், உடுமலைப்பேட்டை ஆகிய 10 அரசு மருத்துவமனைகள் மற்றும் 37 தனியார் மருத்துவமனைகள் என மொத்தம் திருப்பூர் மாவட்டத்தில் 47 மருத்துவமனைகளில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டம் மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது. திருப்பூர் மாவட்டத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் மூலம் 5 லட்சத்து 62 ஆயிரத்து 379 குடும்பங்களுக்கு மருத்துவ காப்பீட்டு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்டத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் மூலம் கடந்த 2021 முதல் தற்போது வரை 40,514 நபர்களுக்கு ரூ.59.19 கோடி மதிப்பில் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், 11.01.2024 முதல் 13.03.2024 வரை உடுமலைப்பேட்டையில் நடைபெற்ற சிறப்பு முகாமில் 13,849 நபர்களுக்கும். 11.07.2024 முதல் 31.08.2024 வரை நடைபெற்ற மக்களுடன் முதல்வர் முகாமில் 16,258 நபர்களுக்கும் மற்றும் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தின் மூலம் 7,605 நபர்களுக்கும் புதிதாக மருந்தக காப்பீட்டு அட்டை வழங்கப்பட்டுள்ளது. மேலும், விபரங்களுக்கு 73730 04271 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

காங்கயத்தில் நிலம், கட்டிடங்களில் அதீத சத்தம்

பொதுமக்கள் பீதி

காங்கயம், மார்ச் 27: காங்கயத்தில் உள்ள நிலம் மற்றும் கட்டிடங்களில் நேற்று மதியம் 2 மணி அளவில் அதிரும் வகையில் அதீத சத்தங்கள் ஏற்பட்டது.

இதனால் மக்கள் பீதியடைந்தனர். இந்த அதீத சத்தங்கள் அடிக்கடி காங்கயம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் கேட்டு வருகிறது. இதனால் மக்கள் பயந்து கட்டிடங்களை விட்டு சில நிமிடங்கள் வெளியேறிவிட்டனர். மேலும் உணவகங்கள் மற்றும் பேக்கிரியில் உள்ள கண்ணாடி பொருட்கள் கீழே விழுந்து உடைந்ததாகவும் கூறப்படுகிறது. ஆனால் எங்கு இருந்து இந்த சத்தம் வருகிறது என்றும் யாருக்கும் தெரிவதில்லை. மேலும் இந்த மர்ம சத்தத்தை மக்கள் அவ்வபோது உணருகின்றனர்.

லாட்டரி விற்ற வாலிபர் கைது

திருப்பூர், மார்ச் 27: திருப்பூர் கேவிஆர் நகரில் லாட்டரி விற்பனை செய்யப்படுவதாக மத்திய போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதனை தொடர்ந்து போலீசார் அப்பகுதியில் ரோந்து மேற்கொண்டனர். அப்போது பேருந்து நிறுத்தம் அருகே சந்தேகத்திற்கிடமாக நின்று கொண்டிருந்த வாலிபரிடம் விசாரணை மேற்கொண்டனர். அதில் கேவிஆர் நகர் ஐஸ் கம்பெனி வளாகத்தை சேர்ந்த தங்கம் (38) என்பதும், அவர் அப்பகுதியில் லாட்டரி விற்பனையில் ஈடுபட்டதும் தெரியவந்தது. தொடர்ந்து போலீசார் வழக்குப்பதிந்து தங்கத்தை கைது செய்தனர். விற்பனைக்கு வைத்திருந்த லாட்டரி சீட்டுகளை பறிமுதல் செய்தனர்.

ரூ.18.90 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

அவிநாசி, மார்ச் 27: அவிநாசி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று பருத்தி ஏலம் நடைபெற்றது. ஏலத்தில் ஆத்தூர், மேட்டூர், கோபி, சத்தியமங்கலம், கொள்ளேகால், அந்தியூர், அத்தாணி, அவிநாசி, புளியம்பட்டி, குன்னத்தூர் ஆகிய பகுதிகளிலிருந்து 228 பருத்தி விவசாயிகள் 270.60 குவிண்டால் எடையுள்ள 951 பருத்தி மூட்டைகள் வந்திருந்தன. இதில், ஆர்சிஎச் பிடி ரகப்பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.6,500 முதல் ரூ.7,889 வரையிலும், கொட்டு ரக (மட்டரக) பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,700 முதல் ரூ.3,484 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ.18 லட்சத்து 90 ஆயிரத்துக்கு பருத்தி ஏலம் நடந்தது. இதில் கோவை, ஈரோடு பகுதியிலிருந்து 11 வியாபாரிகள் கலந்து கொண்டு பருத்தியை கொள்முதல் செய்தனர்.

மின்கம்பம் விழுந்து ஊழியர் படுகாயம்

திருப்பூர், மார்ச் 27: திருப்பூர் மத்திய பேருந்து நிலையம் பகுதியில் உள்ள காமராஜ் சாலையில் மின்கம்பத்தில் நேற்று மின் பழுது ஏற்பட்டது. இதனை மின்வாரிய ஊழியர் சண்முக வடிவேல் சீரமைத்து கொண்டு இருந்தார். அப்போது திடீரென மின்கம்பம் முறிந்து விழுந்ததால் கம்பத்திலிருந்து கீழே விழுந்த அவருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டது. அருகில் இருந்தவர்கள் அவரை மீட்டு ஊத்துக்குளி சாலையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அங்கு முதல் உதவி சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர் மேல் சிகிச்சைக்காக பொள்ளாச்சி அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வருகிறார்.

சாயமேற்றப்பட்ட தர்பூசணி விற்பனை?

உணவு பாதுகாப்பு துறை ஆய்வு செய்ய கோரிக்கை

திருப்பூர், மார்ச் 27: கோடை காலம் தொடங்கியது முதல் திருப்பூர் மாநகரம் மற்றும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் தர்பூசணி, வெள்ளரி, நொங்கு உள்ளிட்டவை விற்பனை செய்யும் கடைகள் அதிகரித்துள்ளது. தர்பூசணி பழக் கடைகள் 200 மீட்டர் தூரத்திற்கு ஒன்று என மாநகர பகுதிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட கடைகள் அமைக்கப்பட்டுள்ளது. திண்டிவனம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்தும் தர்பூசணி வரத்து அதிகரித்திருப்பதன் காரணமாகதற்போது கிலோ 18 ரூபாய் முதல் 25 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. குளிர்பான கடைகளிலும் தர்பூசணி ஜூஸ் அதிகளவு விற்பனை செய்யப்படுகிறது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் செயற்கை நிறமூட்டப்பட்ட தர்பூசணி விற்பனை செய்வது கண்டறியப்பட்டு பறிமுதல் செய்வது மட்டுமல்லாது தர்பூசணி பழங்களை எவ்வாறு விற்பனை செய்ய வேண்டும்? என்பது குறித்து உணவு பாதுகாப்புத்துறையினர் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். தொழில் நகரமான திருப்பூரில் தொழிலாளர்கள் அதிகம் வசிக்கக்கூடிய நிலையில் விலை குறைவு என்பதால் தொழிலாளர்கள் அதிகளவு தர்பூசணிகளை வாங்கி செல்கின்றனர். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை தர்பூசணியை ஆர்வத்துடன் உண்ணுகின்றனர். இச்சூழலில் திருப்பூரில் உள்ள பல்வேறு கடைகளில் பார்ப்பதற்கு சிவப்பு நிறமாய் தெரிய வேண்டும் என்பதற்காக தர்பூசணிகளில் செயற்கை நிறம் ஊட்டப்படுவதாக புகார்கள் எழுந்துள்ளது. திருப்பூர் மாநகரப் பகுதியைச் சேர்ந்த வாடிக்கையாளர் ஒருவர் பெருமாநல்லூர் சாலையில் தர்பூசணி கடையில் வாங்கிச் சென்ற தர்பூசணியை வீட்டில் வைத்து டிஷ்யூ பேப்பரால் சோதனை செய்தபோது தர்பூசணிகள் உள்ள சிவப்பு நிறமிகள் காகிதத்தில் ஒட்டியபடி வந்துள்ளது. இதனால் அதிர்ச்சியடைந்த அவர் வாங்கிச் சென்ற தர்பூசணியை குப்பைத் தொட்டியில் கொட்டியுள்ளார். திருப்பூரில் விழிப்புணர்வு இல்லாத பலரும் இது போன்ற செயற்கை நிறமூட்டப்பட்ட தர்பூசணிகளை வாங்கிச் சென்று உண்பதால் பல்வேறு உடல் உபாதைக்கு உள்ளாக நேரிடும். எனவே இதுபோன்ற செயற்கை நிறமூட்டப்பட்ட தர்பூசணி விற்பனை செய்யப்படுகிறதா? என்பது குறித்து உணவு பாதுகாப்புத்துறையினர் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார்.

▶ உணவு பாதுகாப்புத் துறை அதிகாரிகள் போதிய ஆய்வு மேற்கொள்ளாததால் சாயம் ஏற்றப்பட்ட தர்பூசணி பழங்கள் விற்பனை செய்யப்படுகிறது.

இது குறித்து திருப்பூர் மாவட்ட உணவு பாதுகாப்புத் துறை அலுவலர்கள் கூறுகையில், "திருப்பூர் மாவட்டத்தில் தர்பூசணி கடைகளில் தொடர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை செயற்கை நிறமூட்டப்பட்ட பழங்கள் கண்டறியப்படவில்லை. இருப்பினும் பொதுமக்கள் கடைகளில் தர்பூசணி பழங்களை வாங்கும்போது தங்கள் முன்னிலையில் பழங்கள் அறுத்து விற்கப்படுவதை உறுதி செய்து வாங்கிச் செல்ல வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது. அவ்வாறு வாங்கி செல்லும் பழங்களில் செயற்கை நிறங்கள் சேர்க்கப்பட்டிருந்தாலோ அல்லது அழுகிய பழங்கள் விற்பனை செய்வதாக சந்தேகம் எழுந்தால் உணவு பாதுகாப்புத் துறை அதிகாரிகளிடம் புகார் அளிக்கலாம். புகாரின் மீது உடனடியாக ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்" என தெரிவித்தனர்.

வடமாநில வாலிபரிடம் வழிப்பறி: 3 பேர் கைது

அவிநாசி, மார்ச் 27: அவிநாசி அருகே நடந்து சென்ற வட மாநில வாலிபரிடம் பணம், செல்போன் வழிப்பறி திருட்டில் ஈடுபட்ட 3 பேரை அவிநாசி போலீசார் கைது செய்தனர்.

அவிநாசியில் சூளை மேடு பகுதியில் வட மாநிலத்தை சேர்ந்த பங்கஜ்குமார் (32) என்பவர் தங்கி பனியன் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். நேற்று இவர் தனியாக நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது, அவருக்கு பின்னால் பைக்கில் வந்த 3 பேர், வடமாநில தொழிலாளியை மிரட்டி, ஆயிரம் ரூபாய் மற்றும் செல்போன் ஆகியவற்றை பறித்து சென்றனர்.

இதையடுத்து புகாரின் பேரில் அவிநாசி போலீசார் வழக்கு பதிந்து கொள்ளையர்களை தேடி வந்தனர். இந்த நிலையில் அவிநாசி சாலையப்பாளையம் சூளை பஸ் ஸ்டாப் அருகே சந்தேகப்படும்படி நின்றிருந்தவர்களை போலீசார் பிடித்து விசாரித்தனர். இதில், அவர்கள் அவிநாசிராயன் கோயில் காலனியில் உள்ள பனியன் தொழிலாளர்களான ராஜா (29), பூமாரி (29) மற்றும் ராஜா (29) என்பதும், இவர்கள் பணம், செல்போன் வழிப்பறி திருட்டில் ஈடுபட்டதும் தெரியவந்தது. இதையடுத்து, 3 நபர்களிடமிருந்து, ஆயிரம் ரூபாய் மற்றும் செல்போன் ஆகியவற்றை போலீசார் பறிமுதல் செய்தனர். இவர்கள் 3 பேரையும் அவிநாசி போலீசார் நேற்று கைது செய்து சிறையிலடைத்தனர்.

TATA

டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு முகவரி: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013.

கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024.

அசையா சொத்து விற்பனை அறிவிப்பு

(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8 (6) மற்றும் விதி 9(1) கீழ்)

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002-ன் விதி 8 (6) மற்றும் விதி 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனை, 30 நாள் மின்-ஏலம் அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும்/ உப–கடன்தாரர், அல்லது அவர்தம் சட்டப்பூர்வ வாரிகள்/பிரதிநிதிகள் (கடன்தாரர்கள்) ஆகியோருக்கு குறிப்பாக வழங்கப்படும் அறிவிப்பாவது, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிட். (டிசிஎச்எப்எல்) வசம் அடமானம் வைக்கப்பட்ட, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, கீழே குறிப்பிட்ட கடன்தாரர் மற்றும் உப–கடன்தாரர்களிடமிருந்து நிலுவைத்தொகைகளை மீட்பதற்காக 'உள்ளது உள்ளவிடத்தில்' & 'உள்ளது உள்ளவாறு' மேலும் 'உள்ளது எதுவோ அது' மற்றும் 'எந்த உத்தரவாதமும் இல்லாத' அடிப்படையில் 29–04–2025 நாளில் விற்பனை செய்யப்பட உள்ளது. நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்மூலம் வழங்கப்படும் அறிவிப்பாவது, விற்பனை ஒத்தி வைப்பு/ விற்பனை நிறுத்தம் ஏதும் இல்லாதபட்சத்தில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்து/ சொத்து ஆனது மேற்கூறிய 29–04–2025 நாளில் பிற்பகல் 2.00 மணிக்கு மின்–ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை அடங்கிய முத்திரையிடப்பட்ட உறையானது கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண் 6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை – 600 024 இடத்தில் 28–04–2025 அன்று மாலை 5.00 மணி வரை அல்லது அதற்கு முன்பாக டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

கடனீட்டுச் சொத்து/ அசையாச் சொத்து விற்பனை இங்கே கீழே விவரிக்கப்பட்ட குறு விவரங்களின்படி 'உள்ளது உள்ளவிடத்தில் நிபந்தனையில்' ஆனதாகும்.

வ. எண்	கடன் கணக்கு எண்	கடன்தாரர்(கள்) / உப-கடன்தாரர்(கள்) சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி/ ஜாமீன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	சுவாதீன வகை	20-03-2025 தேதிப்படி நிலுவைத் தொகை
6.	TCHHL0836000100187931 & TCHIN08360001001 90640	திருமதி தேன்மொழி C, M/S. லெஜண்ட் PVC டெக் திரு. செல்லபாண்டி K	TCHHL0836000100187931 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.25,60,458/– மற்றும் TCHIN0836000100190640 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.2,13,285/– & மொத்தம் ரூ.27,73,743/– 15–10–2024	ரூ.44,89,800/– (ரூபாய் நாற்பத்து நான்கு லட்சத்து எண்பத் தொன்பதாயிரத்து எண்ணூறு மட்டும்)	ரூ.4,48,980/– (ரூபாய் நான்கு லட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து தொள்ளாயிரத்து எண்பது மட்டும்)	கையக	TCHHL0836000100187931 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.2732285/– மற்றும் TCHIN0836000100190640 என்ற ஒப்பந்த எண்ணின்படி நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.231383/– மொத்தம் ரூ.2963668/–

அசையா சொத்தின் விவரம்: திருப்பூர் மாவட்டம், திருப்பூர் பதிவு மாவட்டம், அவினாசி சார்பதிவு அலுவலக வட்டாரம், அவினாசி தாலுகா, பழங்கரை கிராமத்தைச் சேர்ந்த காசா எண் 220/4, தற்போதைய உட்பிரிவு காசா எண் 220/4b, புஞ்சை ஏக்கர் 0.36, காசா எண் 220/6a, புஞ்சை ஏக்கர் 1.54, காசா எண் 220/6a2, புஞ்சை ஏக்கர் 1.05, மொத்தப் பரப்பளவு புஞ்சை ஏக்கர் 1.41 சென்ட் கொண்ட நிலம், வீட்டு மனை இடமாக பிரிக்கப்பட்டது. எண் 27, பரப்பளவு 1008 சதுர அடி அல்லது 93.680 சதுர மீட்டர் கொண்ட வீட்டு மனை இடம். எல்லைகள் பின்வருமாறு: தெற்கு: 9.14 மீட்டர் அகலமுள்ள சாலை, வடக்கு: மனை இட எண் 27–இல் உள்ள எஞ்சிய 5 அடிச் சொத்து, கிழக்கு: மனை இட எண் 28, மேற்கு: 10 மீட்டர் தெற்கு வடக்கு சாலை. மேற்படி எல்லைகளுக்கிடையே உள்ள அளவீடு: கிழக்கு மேற்காக இரண்டு பக்கமும் 30 அடி, தெற்கு வடக்கா மேற்குப் பக்கம் 35 அடி, தெற்கு வடக்காகக் கிழக்குப் பக்கம் 35–1/2 அடி. பரப்பளவு 1008 சதுர அடி (அல்லது) 93.680 சதுர மீட்டர் கொண்ட வீட்டு மனை இடம் மற்றும் வழக்கமான வழிப்பாதை, பொதுச் சாலை மீதான உரிமைகளும் பொது உரிமைகள் முதலானவை உட்பட. இந்தச் சொத்து பழைய காசா எண் 220/6a2, பட்டா எண் 2450, புதிய SF எண் 220/6A2A.–இல் அமைந்துள்ளது.

ஏலத்தில், பொதுவாகப் பொதுமக்கள் தனிப்பட்டு தங்கள் ஏலப் புள்ளி(களை) சமர்ப்பிக்க வரவேற்கப்படுகின்றனர். இந்த விற்பனைத் தொடர்பாக ஏதேனும் பணியைச் செயல்படுத்திக் கொண்டிருக்கும் அலுவலர் அல்லது பிற நபர், விற்கப்படும் அசையாச் சொத்தில் ஏதேனும் உரிமையைக் கைப்பற்ற அல்லது கைப்பற்ற முயற்சிக்க நேரடியாக அல்லது மறைமுகமாக ஏலப்புள்ளி அளிக்கலாகாது. விற்பனையானது கடனீட்டுச்சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இல் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் பின்வரும் மேற்கொண்டு நிபந்தனைகளுக்கு உட்பட்டது ஆகும்.

குறிப்பு: மின்–ஏலம் ஆனது http://bankauctions.in/ வலைதளம் மூலம் 29–04–2025 அன்று பிற்பகல் 2.00 மணி முதல் 3.00 மணிக்குள் தலா 5 நிமிடங்கள் வரையறுக்கப்பட்ட நீட்டிப்புடன் நடைபெறும்